**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2018**

------------------------------------------------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சமுத்திர பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றினது நியாயமான பெறுமதி குறிப்பிடத்தக்களவு மாற்றமடையுமிடத்து மீளப் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் நியாயமான பெறுமதி கருத்திற்கொள்ளக் கூடியளவில் மாற்றம் பெறாவிட்டால் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கோ அல்லது ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 526,278,876 தொகையான தேறிய பெறுமதியுடைய பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான மீண்டெழும் தன்மையிலான வாகன திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூபா 792,674 மற்றும் பத்திரிகை விளம்பர செலவினம் ரூபா 578,640 தொகை என்பன நியமத்தின் 21 ஆம் பிரிவிற்கு முரணாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரும் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 47,875,010 தொகையான 04 உருப்படிகள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அச்சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,076,476 தொகையான 02 சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டி ருக்கவில்லை. | நாட்குறிப்பின் மூலம் நீக்கப்பட்டுள்ளது | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததும் தற்போது பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை புத்தகங்களிலிருந்து நீக்குதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டண அளவு மாத்திரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்வதற்குப் பதிலாக 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,420,460 ஆன கணக்காய்வுக் கட்டணங்கள் அளவு ஆண்டின் செலவின மொனற்றாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறுமதி வேறாக இனங்காணப்பட வேண்டும். | முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்கள் வேறாக இனங்காணப்பட்டு முன்னைய ஆண்டு சீராக்கத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மானியமாக கிடைத்திருந்த ரூபா 27,159,250 தொயையான 04 வாகனங்களுக்குரிய மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு அளவு ரூபா 6,790,812 ஆக இருந்த போதும், அது ரூபா 1,131,635 என கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 5,659,177 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் வாகனம் பாவனைக்கு எடுக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படாமை காரணமாக திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 10,622,562 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் இறுதிக் கணக்ககளில் உள்ளடக்கப்பட்ட திகதி முதல் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் சொத்து பயன்பாட்டு தகதி முதல் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டும் |
| (இ) | அட்டுறு அடிப்படையில் பட்டப்படிப்பு மேலங்கி கொள்வனவு செய்வதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,092,250 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் குறித்த கொடுப்பனவின் போது குறித்த அட்டுறு செலவினக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாணந்துறையின் கட்டி கல்லூரியின் கட்டிடங்கள் நிர்மாணங்களின் செய்த வேலையின் பெறுமதி ரூபா 7,627,445 ஆக இருந்த போதும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட தேறிய தொகையான ரூபா 5,945,365 மாத்திரம் நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் நடைமுறை வேலைக் கணக்கின் மீதி ரூபா 1,682,080 ஆல் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திருகோணமலை கல்லூரியின் கட்டிட புதுப்பித்தலுக்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மாகாண பொறியியலாளர் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 5,700,000 ஆன முற்பணக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக கட்டிடங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த முன்னைய ஆண்டுகளுக்குரிய பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 225,000 ஆன நிலுவை பாடநெறிக் கட்டண வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் பாடநெறிக் கட்டண வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டில் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 319,777 ஆன வாடகை மீளாய்வாண்டில் மீண்டும் பணமாக கிடைக்கும் போது முன்னைய ஆண்டின் சீராக்க கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் குத்தகை வாடகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ஏ) | அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்படாதிருந்த முன்னைய ஆண்டுகளுக்குரிய இரண்டு நிர்மாணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,938,566 தொகையை தீர்வுசெய்யும் போது அட்டுறு செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தவறினை மீளாய்வாண்டில் நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் சீராக்கும் போது குறித்த சொத்துக் கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | குறித்த தகவல்கள் கிடைத்ததன் பின்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ஐ) | நீர் கொழும்பு கல்லூரியின் நிர்மாணத்திற்காக அட்டுறு செலவினத்தின் கீழான ரூபா 1,787,547 ஆன மிகை ஒதுக்கீடு மீளாய்வாண்டில் நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் சீராக்கும் போது குறித்த சொத்துக் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியான கணக்கீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் | 15,092,123 | 33,725,250 | 18,633,127 | கல்லூரி மட்டத்தில் நிலுவை பாடநெறிக் கட்டணங்கள் வருமானம் இனங்காணப்பட்டு வருகின்றது. | சரியாக பாடநெறிக் கட்டணங்கள் வருமானம் இனங்காணப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கு இடையே ஒப்பிட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிலையான சொத்துக்கள் மற்றும் அட்டுறு செலவினம் | 773,033,994 | விரிவான அட்டவணைகள், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் உருப்படிகள் வெவ்வேறாக இனங்காண்பதற்கும் அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இருந்து வரும் பெறவேண்டிய விடுதிக்கட்டணங்கள் ரூபா 2,892,804 தொகை கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 15,092,123 மற்றும் 2015.03.01 ஆந் திகதி குத்தகை ஒப்பந்தம் இரத்துச் | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட மட்டக்குளி பெரேரா விடுதிக்காக வைப்புச் செய்யப்ட்ட ரூபா 840,000 ஆன மீள அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிவல்லை. | | |
| (ஆ) | பெறவேண்டிய கணக்குகளின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் முற்பணக் கணக்கின் கீழ் காணப்படும் தீர்வுசெய்யப்படாத ரூபா 3,742,168 ஆன மீதியொன்றும் நாரா நிறுவனத்திடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் 2002-2014 காலப்பகுதியின் போது பெறவேண்டிய மீதி ரூபா 1,329,343 தொகையும் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த சம்பளம் மற்றும் பிரயாணச் செலவின முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 131,500 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

-----------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு முன்னர் இருந்து வரும் செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 30,353,021 தொகை இனங்காணப்பட்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகைகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

-----------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,016,544 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,768,782 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,785,326 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரச மானியம் ரூபா 61,887,000 ஆல் அதிகரித்திருந்த போதும் சம்பளம் மற்றும் வேதன செலவினங்கள் ரூபா 26,600,220 ஆலும் அதிகரித்தமை மற்றும் நானாவிதச் வருமானம் ரூபா 6,200,044 ஆலும் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

(அ) குத்தகைச் செலவினம் ரூபா 16,511,828 ஆல் அதாவது 210 சதவீதத்தினாலும் பாதுகாப்பு செலவினம் ரூபா 4,533,494 ஆலும் அதாவது 47.5 சதவீதத்தினாலும் சுததிகரிப்பு செலவினம் ரூபா 1,732,620 ஆலும் அதாவது 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக புதிய நிர்மாணம் மற்றும் கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) சம்பள மற்றம் வேதனங்கள் மற்றுமு் ஏனைய படிகள் செலவினம் 37 சதவீதமாக அதாவது ரூபா 59,136,658 ஆல் அதிகரித்திருந்தது. அதற்காகபல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சம்பள குறயீடுகள் சமுத்திரப் பல்கலைக்கத்தின் அஜனத்து பதவியணியினருக்கு உரித்தாக்கப்பட்டிருந்தமை காரணமாக இருந்தது.

(இ) ஏனைய வருமானம் 35 சதவீதமாக அதாவது 6,200,044 ஆலும் குறைவடைந்தமைக்காக மீன்பிடி படகு ஓட்டுனர் (Fishing Vassal Sxiper) பாடநெறிக் கட்டணங்களாக வருமானம் 71 சதவீதமாக ரூபா 10,353,127 ஆல் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 5.1(ஏ) பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட வேண்டிய தேசிய கடற்றொழில் மற்றம் கடல்சார் பயிற்சி நிறுவனம் மீளாய்வாண்டின் இறுதி வரை தாபிக்கப்பட்டிடிருக்கவில்லை. எனினும் இப்பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியல் 12 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டிற்காக சம்பளம் ரூபா 7,858,254 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய 13 உபகரண அலகுகள் பிரதேச கல்லூரிகளில் காணப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் செயற்திறனான செயற்பாட்டிற்காக சட்டத்தின் பிரகாரம் தாபிக்க வேண்டிய நிறுவனங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 5.1(ஐ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் | எதிர்காலத்தில் பாடநெறிக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடுவதற்கு முடியுமாக இருப்பதால் கட்டணங்களை |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்தப்படும் கல்வி பாடநெறி மற்றும் பயிற்சிக் கற்றை நெறிகளுக்காக கட்டணங்களை அறவிட முடியுமாக இருந்த போதும் 2017 ஆம் ஆண்டு முதல் நடாத்தப்படும் பாடநெறிகள் மற்றும் பயிற்சிகளுக்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. இறுதியாக கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 19.8 மில்லியனாக இருந்தது. | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 இன் 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட வேண்டிய , பீடாதிபதிகள் போன்ற பதவிகளுக்காக ஆட்களை நியமித்தல் மற்றும் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதித்தல், தராதரப்படுத்தல் மற்றும் தர உறுதிப்படுத்தல் சபை, கலைச் சபை, பீட அதிகாரசபை, மண்டபங்கள், தாபித்தல் மீளய்வாண்டிலும் மேற்கொள்ளப் படவில்லை. | எதிர்காலத்தில் குறித்த பதவிகளை நிரப்புவதற்கும் குறித்த சபைகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவகத்தின் நிலைத்திருதன்மை மற்றும் சிறந்த முகாமைத்துவத்திற்கு அப்பதவிகள் மற்றும் சபை தாபிபதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 147 வெற்றிடங்கள் நிலவியதுடன் ஒப்பந்த அடிப்படையின் கீழ் 19 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காகவெளிவாரி விரிவுரையாளர்கள் ‘ மதியுரையாளர்கள் 77 பேரிடமிருந்து சேவை பெறப்பட்டு அதற்காக ரூபா 5,129,825 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கும் உள்ளீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிறுவகத்திற்கு தேவையான பதவியணினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய பல்கலைக்கழகத்தினால் வெவ்வேறு பாடநெறிகள் ' நிகழ்ச்சித்திட்டங்கள் 106 நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2376 பேர் சமூகமளித்திருந்தனர். எனினும் இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து 72 நிகழ்ச்சித்திட்டங்கள் அளவில் 7 - 25 இடைப்பட்ட வீச்சில் 1724 நபர்கள் பங்குபற்றிய குறுங்கால பாடநெறிகள் நடமாடும் நிகழ்ச்சிகளாக காணப்பட்டது. நிறுவகத்தினால் நடாத்தப்பட்டிருந்த பட்டப்படிப்பு, டிப்ளோமா, மற்றும் சான்றிதழ் போன்ற நீண்டகால பாடநெறிகளுக்காக 7 இற்கும் 50 இடைப்பட்ட வீச்சில் மாணவர்கள் சமூகமளித்திருந்த பாடநெறிகள 34 ஆக இருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தினால் நீண்டகால பாடநெறிகளை நடாத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காக பதவியணியினர் செலவினம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவிமாக முறையே ரூபா 104,696,296 மற்றும் ரூபா 226,204,042 தொகை பல்கலைக்கழகத்தி னால் செலவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தினால் நீண்டகால பாடநெறிகளை நடாத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திருகோணமலை வித்தியாலயத்தின் களஞ்சியம் மற்றும் வேலைகள் கட்டிடத்தின் திருத்த செயற்பாட்டிற்குரிய திருகோணமலைக் கட்டிடத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 5,700,000 மதிப்பிடப்பட்ட பெறுமதி 2018 திசெம்பர் 28 ஆந் திகதி அத்திணைக்களத்திற்கு செலுத்தப் பட்டிருந்தது. எனினும் அதற்குரிய உடன்படிக்கை 2019 சனவரி 14 ஆந் திகதியே மேற் கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2019 யூலை 14 ஆந் திகதி அளவில் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2019 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக முன்னேறற்ம் 45 சதவீதமாக இருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவவொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதற்காக 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டம் நிறைவேற்றப்பட்டு சுற்றறிக்கை மூலம் சகல அரச நிறுவனங்களும் அறிவுறுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தமது வியப்பரப்பிற்குள் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக சகல அரச நிறுவனங்களும் அறிந்திருக்க வேண்டிய போதும் பல்கலைக்கழகம் அச்செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகள் நோக்கி அடைடந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக குறிகாட்டிககள் இனங்காணப்பட்டி ருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 பிரசைகள் / சேவைநாடுனர் சாசனத்தை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(01) ஆம் இலக்க சுற்றிக்கை மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பிரசைகள் / சேவைநாடுனர் சாசனத்தை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவகத்தினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 மனித வள முகாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பின்னிணைப்பு 02 மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |